**<u>14.11.2025 அசல் வழக்கு எண். 1/2014</u> Starting Time : 12.21 p.m.**

**<u>வா.சா.1 திருமதி. அஞ்சலை க/பெ.செல்வம்</u>**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1**). நான் எத்தனாவது வரை படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எழுத தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்று தெரியுமா என்றால் என் அப்பா எனக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார், அதை ரத்து செய்தது தவறு என்று வழக்கு போட்டுள்ளேன். சாட்சியிடம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வழக்குரையை காண்பித்து படித்து பார்க்க சொல்லி என்ன பரிகாரம் கேட்டுள்ளதாக கூறினார், சாட்சி படித்து பார்த்துவிட்டு சொத்து எனக்கு சொந்தமானது என்று கேட்டுள்ளேன் என்று கூறினார்.

**2**). நான் யார் யார் மீது வழக்கு போட்டுள்ளேன் என்றால் என் அப்பா மற்றும் என் சகோதரிகள் மீது போட்டுள்ளேன். வழக்கு நிலுவையில் இருந்தபோது என் அப்பா காலமாகிவிட்டார் என்றால் சரிதான். எனது அப்பா காலமான தேதி, வருடம் ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. என் அப்பா எனக்கு எந்த தேதி, மாதம் மற்றும் வருடம் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் 31.05.2004-ல் எழுதிக் கொடுத்தார். மொத்தம் சென்ட் எவ்வளவு என்றால் 25 1/2 சென்ட் ஆகும். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை எனது அப்பா ரத்து செய்துவிட்டாரா என்றால் ரத்து செய்துவிட்டார். எந்த தேதி, மாதம் மற்றும் வருடத்தில் ரத்து செய்தார் என்றால் தேதி, மாதம் ஞாபகம் இல்லை, வருடம் 2006 ஆகும்.

**3**). நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் சென்னையில் வசித்து வருகிறேன். தாவா சொத்து காலி இடம் என்றால் சரிதான். தாவா சொத்தில் யாரும் இல்லை என்றால் சரிதான். காலி இடமாக தான் உள்ளது என்றால் சரிதான். என் அப்பா எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்த பிறகு தாவா சொத்திற்கு நான் அரசாங்கத்திற்கு வரி ஏதும் செலுத்தினேனா அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வரி செலுத்தவில்லை, ஆனால் பட்டா என் பெயரில் உள்ளது. தற்போது பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என்னுடைய பெயரில் தான் உள்ளது.

**4**). கடந்த 2006ல் எனது அப்பா செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து

செய்துவிட்டு, அதே ஆண்டே 2,3 பிரதிவாதிகளான எனது சகோதரிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு தாவா சொத்திற்கான பட்டா 2,3 பிரதிவாதிகளான எனது சகோதரிகள் பெயருக்கு மாறிவிட்டது என்றால் ஞாபகம் இல்லை. செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியவுடனே 2,3 பிரதிவாதிகளின் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. என் பெயரில் எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்த விவரமும், 2,3 பிரதிவாதிகளுக்கு என் தகப்பனார் செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரமும் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2013ல் முள்மரங்களை வெட்டிய போது தெரிய வந்தது.

**5**). என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்த வழக்குரையில் பரிகாரத்தில் என் தகப்பனார் எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்தது செல்லாது என்றும், 2,3 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சாட்சி படித்து பார்த்துவிட்டு இல்லை என்று கூறினார். நான் தாக்கல் செய்த வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எனது தகப்பனார் என் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்தது செல்லாது என்றும், என் சகோதரிகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

**6**). மேற்படி எனது அப்பா செட்டில்மெண்ட் ரத்து செய்த விவரமும், 2,3 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரமும் எனக்கு 2013லேயே தெரியும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை 18.12.2013ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2013ல் எனக்கு தெரிய வந்தபோதே தற்போது 12 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்ததும், 2,3 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்ததும் செல்லாது என்று 2013க்கு பின்னிட்டு தற்போது வரை ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கை தவிர வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா கிராமத்திற்கு நான் எத்தனை முறை வந்துள்ளேன் என்றால் முன்பு 1,2 முறை வந்துள்ளேன், தற்போது நான் அடிக்கடி வருகிறேன்.

**7**). 2,3 பிரதிவாதிகளின் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டதை குறித்து நான் அதை ரத்து செய்யச் சொல்லி நடவடிக்கை எடுத்தேனா என்றால் வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் நான் எடுக்கவில்லை. பட்டா 2,3 பிரதிவாதிகள் பெயரில் உள்ள விஷயம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு தெரியவந்தது, எப்போது என்று எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் இந்த வழக்கில் பதில் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த பதில் உரையில் பட்டா 2,3 பிரதிவாதிகள் பெயரில் மாறிவிட்டது என்றும், அதற்கான கணிணி சிட்டாவை தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதை படித்து பார்த்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

**8**). நான் வழக்குச் சொத்துக்களின் அனுபவத்தில் இல்லை என்றும், வழக்கு சொத்துக்களுக்கான ஆவணம் ஏதும் என் பெயரில் இல்லை என்பதாலும் இந்த வழக்கில் நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்து என் தரப்பில் குறியீடு செய்த ஆவணங்களில் 2006 முதல் 2013வரை எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்துக்களை பொறுத்து நான் கேட்டுள்ள பரிகாரத்திற்கு பட்டாவை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. என் சாட்சியமும், சான்றாவணமும் எனது தரப்பு வழக்கை நிரூபிக்க போதுமானதாக இல்லை என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**Ending time : 12.58 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.